(3) ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி

(ஆ) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசப்பெற்றது குறித்து.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, இதை நான் ஒரு ஒழுங்குப் பிரச்னையாகக் கூட எழுப்ப விரும்புகிறேன். ஒரு வார காலத்திற்குள் மூன்றாவது முறையாக இப்படிப்பட்ட சம்பவம் நடக்கிறது. இப்படித் தொடர்ந்து நடந்து கொண்டிருப்பது நம்முடைய சபையின் ஒழுங்கு முறையை எங்கு கொண்டு போய் விடும் என்பதை நாம் ஆலோசனை செய்தாகவேண்டும். இப்படிப் பட்டவர்களுக்கு யார் அனுமதிச் சீட்டு கொடுக்கிறார்கள் என்பதையும் தாங்கள் அறிவிக்க வேண்டும். அப்படி அறிவிப்பதின் மூலமாக மேலும் ஜாக்கிரதையாக இருப்பதற்கு வழிகோலுவதாக அமையும். இப்படிப்பட்டவர்களுக்கு இரண்டு நாட்கள், மூன்று நாட்கள் என்று தண்டனை அளிக்கப்பட்டும் ஏன் இப்படி நடந்து கொண்டிருக்கிறது என்று தெரியவில்லை. ஆகவே இதன் மீது உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் அவர்களுடைய உணர்வை நானும் உணர்கிறேன். அனுமதிச் சீட்டுக்கு கையொப்பம் இடுகின்ற உறுப்பினர்கள் தாங்களாகவே தங்களுடைய பொறுப்புகளை உணர்ந்திருக்கிறார்கள். தாங்கள் அனுமதிச் சீட்டு வழங்குபவர்களுக்குப் பொறுப்பேற்றுதான் கையொப்பம் இடுகிறார்கள். இதையெல்லாம் தெரிந்து தான் உறுப்பினர்கள் கையொப்பம் இடுகின்றார்கள். ஆகவே இனிமேலாவது கையொப்பம் இடுகின்றவர்கள் இதையெல்லாம் கருத்தில் கொண்டு பொறுப்போடு கையொப்பம் இடுவார்களேயானால் இப்படிப்பட்ட பிரச்னை வராது. ஏற்கனவே இதற்காக தீர்மானத்தைக் கொண்டு வந்தபோது, எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களும், இவ்வளவு பெரிய தண்டனை வேண்டுமா என்றெல்லாம் கேட்டார்கள். திரு. உமாநாத் அவர்கள் உட்பட எல்லோரும் கேட்டார்கள். ஆகவே இதையெல்லாம் ஆலோசித்து நீங்கள் எல்லோரும்தான் ஒரு முடிவு எடுத்து, இந்த அவைக்குப் பாதுகாப்பு தரவேண்டும்.

திரு. எம். ஏ. லத்தீப் : மேலும் காகிதம் எதுவும் பார்வையாளர்கள் கொண்டுவரக் கூடாது என்று செக்யூரிட்டியில் இருப்பவர்கள் சோதனை செய்து அனுப்ப வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சோதனை செய்துதான் அனுப்புகிறார்கள். இன்று காலையில் கூட இப்படி சோதனை போட்டதில் மூன்று பேர்களிடம் இப்படிப்பட்ட காகிதம் இருந்ததற்காக அவர்களை வெளியே அனுப்பிவிட்டார்கள். அதையும் மீறித்தான் இந்தப் பிரச்னை வந்திருக்கிறது. கூடுமானவரை எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன.